# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டறிதல்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டறிதல்

**தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டறிதல்**

**<u>தன்வினை வாக்கியம்:</u>**

- எழுவாய், தானே ஒரு செயலைச் செய்தல் தன்வினை எனப்படும்.

**எ.கா:** இராமன் பாடம் கற்றான் - தன்வினை வாக்கியம்
தேவி பொம்மை செய்தாள் - தன்வினை வாக்கியம்
நான் இராமனை திருத்தினேன் - தன்வினை வாக்கியம்
மாலா சோறு உண்டாள் - தன்வினை வாக்கியம்
மாறன் தரையில் உருண்டான் - தன்வினை வாக்கியம்
உழவர் நிலத்தை உழுதார் - தன்வினை வாக்கியம்

**<u>பிறவினை வாக்கியம்:</u>**

எழுவாய், ஒரு செயலைப் பிறரைக் கொண்டு செய்வித்தல் பிறவினை வாக்கியம் எனப்படும்.

**எ.கா:** இராமன் பாடம் கற்பித்தான் - பிறவினை வாக்கியம்
தேவி பொம்மை செய்வித்தாள் - பிறவினை வாக்கியம்
ஆசிரியர் மாணவனை திருத்தினார் - பிறவினை வாக்கியம்
தாய் குழந்தைக்கு உணவு உண்பித்தாள் - பிறவினை வாக்கியம்

**<u>செய்வினை வாக்கியம்:</u>**

- எழுவாய், செய்படுபொருள், பயனிலை என்று வரிசையில் வாக்கியம் அமைதல் செய்வினை வாக்கியம் எனப்படும். செய்படுபொருளோடு ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து வரும். (“ஐ” உருபு மறைந்தும், வெளிப்பட்டும் வரும்).

**<u>செய்பாட்டுவினை வாக்கியம்:</u>**

- செய்படுபொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமைதல் செய்பாட்டுவினை வாக்கியம் எனப்படும். (எழுவாயோடு “ஆல்” என்ற மூன்றாம் வேற்றுமை உருபும், பயனிலையோடு “படு, பட்டது” எனும் சொற்களும் சேர்ந்து வரும்.

| **செய்வினை வாக்கியம்** | **செய்பாட்டுவினை வாக்கியம்** |
|---|---|
| மாணவர்கள் வகுப்பைத் துாய்மை செய்தனர் | வகுப்பு மாணவர்களால் துாய்மை செய்யப்பட்டது |
| ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார் | இலக்கணம், ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது |
| பாரதியார் என்றென்றும் நிலைத்து நிற்கும் இலக்கியங்களைப் பாடியுள்ளார் | நிலைத்து நிற்கும் இலக்கியங்கள் பாரதியாரால் பாடப்பட்டுள்ளது. |
| திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் | திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. |
| நம்பி நாடகம் நடித்தான் | நாடகம் நம்பியால் நடிக்கப்பட்டது. |